உ
சிவமயம்



மானிப்பாயைச் சேர்ந்த

# அமரர் திருமதி தனலக்ஷ்மி இலங்கநாதன்

இளைப்பாறிய ஆசிரியை
பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி,
தர்கா நகர் ஸாஹிறா கல்லூரி,
NIGERIA - EGBADO HIGH SCHOOL

அவர்கள் சிவபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

# A MEMORIAL TRIBUTE



**08. 04. 2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

நீ நடந்த நடை நல்ல சிவ நடை
இந்த மண்ணில் பூ நடந்தது போல்
யார்க்கும் பொல்லாங்கு அற்ற நடை
நாவடங்கி, வாழ்ந்தாலும் நன் நெஞ்சில்
சிவம் நடக்க நான் மதமும் சார்கின்ற
நற்குன்றில் ஏறி நின்று வான் நடந்தாய்
இன்று வறுமையிலா வாழ்வு கண்டாய்
ஊன் கிடந்தற்கு அழுவார் உன்
மெய்மை அறியாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர். **திருமதி. தனலக்ஷ்மி இலங்கநாதன்** அவர்கள்

மலர்வு
02. 06. 1933

உதிர்வு
08. 03. 2006

## திதி வெண்பா

செப்பு நற் பார்த்திபஞ் சேர்மாசி சார் பூர்வம்
ஒப்பில் நவமிதனை யுற்றபுதன் - இப்புவியில்
உற்ற தன லக்ஷ்மியெனும் ஓங்குபுகழ் மாதரசி
நற்பதவி தானடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**எமது இனிய அன்புத்**
**தெய்வத்திற்குச்**
**சமர்ப்பணம்**



மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற் பேசி
அன்புடன் எமக்கு உதவி
அனைவருடனும்
பண்புடனும் பாசத்துடனும்
இன்முகத்தினளாய்
வையகத்தில் இறுதிவரை
வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும்
தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வம்
**ஞானலக்ஷ்மி இலங்கநாதன்**
அவர்களின் பொன்னடிகளுக்குக்
காணிக்கையாக இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
- குடும்பத்தினர்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோருமுடிவி லொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம் பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.
- பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

கருவாய்க் கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த் திரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திருப்புலி யூரரனே.

## திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந் தெனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தால்
ஊன் ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பானித் தெருவே
ஐயா நீயுலாப் போந்த வன்றுமுத வின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார்வந் தாரமார் குழாத்தி லணியுடையாதிரைநாள்
நாராயண னொடுநான் முகனங்கி யிரவியு மிந்திரனும்
தேரார்வீதி யிற்றேவர் குழாங்க டிசையனைத்து நிறைந்து
பாரார்தொல் புகழ்பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீ ழிருக்க என்றார்.

## திருப்புகழ்

ஒரு மையுடன நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள் ஒன்ற வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும் உனை
என்றும் மறவாதிரக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும் நோயற்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள வளர்
தலம் ஓங்கும் கந்த வேளே
சண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. தனலக்ஷ்மி இலங்கநாதன் அவர்களுக்கு நற்கதி அருளும் வண்ணம் கடவுளரை வேண்டுதல்.**

## மானிப்பாய் மருதடி விநாயகரிடம்

ஆயிரக்க ணக்கான ஆண்டு காலம்
அமரர் கநியாயம் செய்த அந்த
மாயமகன் கயமுகனை வதைத்த அண்ணல்
மாணிக்கம் நீயன்றோ மாநி லத்தில்
தீயர்க்கும் தீங்கொன்றும் செய்தி டாத
திருமதியாம் தனலக்ஷ்மி வானில் வந்தாள்
தூய்மையுறு மானிப்பாய் மருத டிக்கண்
தும்பிமுகா அன்னாட்கு மோட்சம் நல்கே.

## மாவிட்டபுரம் கந்தசாமியாரிடம்

ஓம் என்ற பிரணவத்தின் உருவைக் காட்டும்
உயர்மஞ்சை மீதமரும் கடவு ளாரே
தேவர் தொழும் மாவிட்ட புரமென் றோதும்
திருத்தலத்தில் எம்மனோர்க்காய் வந்து நின்று
யாவருக்கும் வேண்டியன எல்லாம் நல்கும்
எம்பெருமான் கந்தசாமி ஏந்த லாரே
ஆவலுற்றோம் தனலக்ஷ்மி அன்னை யார்க்கு
அடியிணைக ளைக்கட்டி ஆட்கொள் வாயே.

## மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையாரிடம்

புத்தியிலே சிந்தித்துப் பார்த்து விட்டார்
பூவுலக விந்தையினைப் புரிந்து கொண்டார்
நித்தியமாய் நாம்காணும் வாழ்க்கை எல்லாம்
நீண்டதொரு நாடகத்தின் மேடை என்றும்
அத்தனையும் சந்தையுற வென்றும் கண்டார்
அத்தனே வேலக்கைப் பிள்ளை யாரே
அன்னார்க்கு முத்திநெறி காட்டு வீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லி ஊர்த் துர்க்கா தேவியிடம்

சிவன்தன்னை நிந்தித்த தந்தை தக்கன்
செய்திட்ட அபசார வேள்வி தன்னை
தவவீர பத்திரனைச் சார்ந்து சென்று
தவிடுபொடி செய்திட்ட துர்க்கா தேவீ
கவினாரும் தனலக்ஷ்மி என்னும் மாது
காசினியில் உடலைவிட்டு வானில் வந்தாள்
பவக்கடலைத் தாண்டுதற்காய் அருளாந் தோணி
பரிந்தளித்து அன்னாட்கு மோட்சம் நல்கே.

## தெஹிவளை ஆஞ்சநேயரிடம்

செவ்வநிறை கொழும்பிலுறு தெஹிவளைக் கண்
சேர்ந்துநின்று அருள்புரியும் ஆஞ்ச நேயா
மல்லாரும் இராமனுக்காய்க் கடல்க டந்து
வந்திலங்கை வேந்தனுக்குத் தூது வந்தாய்
மெல்லியனாள் சீதையிடம் இராமன் ஈந்த
மேன்மையுறு மோதிரத்தைச் சேர்த்த வீரா
கல்விவல்ல தனலக்ஷ்மி வானில் வந்தாள்
காட்டுவாய் துறக்கத்தை அன்னா ளுக்கே.

## சிவபெருமானிடம்

பொன்முதலாம் போகங்கள் புகழக் கான
புண்ணியங்கள் போன இடம் எலாம் மதிப்பு
இன்பமெல்லாம் இப்பிறப்பில் இளமை எய்தி
இனிப்போதும் பொய்யின்பம் எனவெ றுத்துப்
பின்பிறவாப் பெருநிலையே வேண்டிச் சென்றாள்
பெயர்த்துமிப் பிறவதனை விரும்பிடாதாள்
மின்னொளிசேர் சடைமுடியாய் ஈச னாரே
மேலுலகைத் தனலக்ஷ்மிக்குக் காட்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

இளைப்பாறிய பிரதிப் பரீட்சை ஆணையாளர்
திரு.இலங்கநாதனின் மனைவியான

# திருமதி.தனலக்ஷ்மி இலங்கநாதன்

(இளைப்பாறிய ஆசிரியை)

## அவர்களின்
## வாழ்க்கை வரலாறு

தமிழீழத்தின் சிரசாம் யாழ்ப்பாணத்தின் வடலியடைப்பு-சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ப.மாணிக்கம் (மலேசியா புகையிரதசேவைப் பிரதம நிரந்தர வழிப் பரிசோதகர்) மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கலக்ஷ்மி கணபதிப்பிள்ளை எனும் பெண் திலகத்தை மனையாளாகக் கொண்டு வாழ்ந்த நல்வாழ்க்கைப் பலனாய்ப் பெற்ற செல்வங்கள் நால்வர்: திலகவதி, ஞானேஸ்வரி, தனலக்ஷ்மி, தங்கராணி ஆவர்.

தனது பெற்றோர் சகோதரர்களுடன் நாடுதிரும்பிய இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்தார். சகல பாடங்களிலும் சிறந்து விளங்கினார். கல்லூரியில் நடைபெறும் சகல வைபவங்களிலும் இவர் பங்குபற்றுவார். பேச்சுப் போட்டிகளிலும் முதற் பரிசைத் தட்டிக் கொள்வார். கல்லூரி நாடகங்களில் பங்குபற்றி திறமையாக நடித்து, பல சிறப்புப் பரிசுகளும் பெற்றுள்ளார். இவரது திறமைகளை புகழாத ஆசிரியர்களே இல்லையெனலாம். மேற்படிப்புக்கென இந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் B.Sc பட்டப் படிப்பை முடித்து நாடு திரும்பினார்.

1958இல் தர்காநகர் ஸாஹிராக் கல்லூரியில் இவர் ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினார். அங்கு இவரது, கண்டிப்பும், நேர்மையும், ஒழுக்கமும், தயாள சிந்தனையும், துன்பப்படுவோரின் துயர் துடைக்கும் சுபாவமும் கொண்ட இவரது குணாதிசயங்களைக் கண்டு மெச்சாத சக ஆசிரியர்களும் மாணவர்களும் இல்லையெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கம் ரீச்சர் என்று அன்புடன் அழைக்கப்படும் இவரின் வழிகாட்டல் மூலம் பட்டதாரியாகி, தற்போது ஒரு சிறந்த தொழிலதிபராகவுள்ள திரு.ஹமீஸ் என்பவர் இவரது பழைய மாணவர். ரீச்சரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவென வந்த இவரின் கூற்றும் இவ்வாசிரியரின் குணாதிசயங்களுக்குச் சான்று பகரும் : ''9ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது குடும்பத்தில் நிலவிய பணத்தட்டுப்பாடு காரணமாக கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்து கொள்ள என்னால் இயலவில்லை. இதனை அறிந்த மாணிக்கம் ரீச்சர் உடனே அதற்கான பணத்தைக்கட்டி என் பெயரையும் பட்டியலிற் சேர்த்தார்''. இக் கூற்றைச் செவியுற்ற இன்னொரு பழைய மாணவர் கூறினார் : ''இது மட்டுமா! படிப்பதற்கு, பணக்கஷ்டம் முட்டுக்கட்டையாக இருந்த பல வறிய மாணவர்க்குப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் போன்றவற்றைத் தானே வேண்டிக் கொடுத்து உதவியுள்ளார். சில சந்தர்ப்பங்களில் ஸ்கூல் ஃபீஸ் கட்ட முடியாது தவித்த மாணவருக்கும் அதனைச் செலுத்தி உதவியுமுள்ளார்''.

1966ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு மாற்றலாகி வந்த திரு. இலங்கநாதனும் இவரும் ஒருவரையொருவர் விரும்பி 1968 இல் மணம் புரிந்தனர். ''வள்ளுவர்-வாசுகி'' போல், என்று நல்ல தம்பதியினர்க்கு உதாரணம் சொல்வார்கள். அந்த வழியில் ஓர் சிறந்த தம்பதியினராக, சிறந்த இல்லறத்துக்கு எடுத்துக் காட்டாக இவர்கள் வாழ்ந்தனர் என்று கூறினால் அது மிகையாகாது. இங்கு தொடர்ந்து கடமையாற்றிய இவர்கள் 1974 இல் கொழும்புக்கு மாற்றம் பெற்று வந்தனர். பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொட்டாஞ்சேனை நல்லாயர் அரசினர் தமிழ் வித்தியாலயம் போன்ற கல்லூரிகளில் இவர் கடமையாற்றி வந்தார்.

1981 இல் தம்பதிகள் இருவரும் நைஜீரியாவுக்கு தொழில் சம்பந்தமாகச் சென்று 1990 வரை அங்கு கடமையாற்றினர். இப்பிற நாட்டிலும் தன்னாலான உதவிகள் சகலவற்றையும் செய்து வந்தார். சுகயீனம் காரணமாக வேலையை இராஜினாமாச் செய்து நாடு திரும்பினர்.

சிறந்த சாயி பக்தைகளான இவர்கள் நாடு திரும்பும் வழியில் புட்டபர்த்தி சென்று பகவான் சாயியின் பாத நமஸ்காரம் செய்து அவரின் ஆசியையும் பெற்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கற்பித்து வந்த கல்லூரிகள் எல்லாவற்றிலும் அங்கு கடமையாற்றிய அதிபர்கள் முதற்கொண்டு கடைநிலை ஊழியர் வரை சகலரினதும் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கினார். தம் வேலை நேரம் தவிர்ந்த நேரங்களில் தம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்க்கும் தம்மாலான உதவிகளைச் செய்து நல்ல ஒரு பிரஜையாக வாழ்ந்து வந்தார்.

வயது எழுபத்தியொன்று முடிந்த நிலையில் தமக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவினால், தாம் வாழ்ந்த நெஞ்சங்களில் தன் பிரிவினால் ஏற்படும் துயரை, இழப்பை ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவத்தை பத்துமாத காலமாக அளித்து தமது எழுபத்திரண்டாவது வயதில் இம் மண்ணுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடிகளில் சங்கமமாகி விட்டார். எம்மை விட்டகலா அவர்தம் நினைவுகளுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

**''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்''**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தெல்லிப்பழை கிழக்கு மலாயன் பென்ஷனர் திருவாளர் காசிப்பிள்ளை-திருமதி.வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் இளைப்பாறிய பிரதிப் பரீட்சை ஆணையாளர் திரு.இலங்கநாதனின் ஆருயிர் மனைவியும் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திரு.மாணிக்கம் திருமதி. தங்கலக்ஷ்மி தம்பதிகளின் புத்திரியுமாகிய **திருமதி.தனலக்ஷ்மி** அவர்கள் 08.03.2006 இல் சிவபதம் எய்திய துயரச் செய்தி வீரகேசரி வாயிலாக அறிந்து அளவிலாக் கவலை அடைந்தேன்.

திருமதி.தனலக்ஷ்மி சைவாசாரம், கடவுள் பக்தி குரு பக்தி நிரம்பியவர். எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றவர். தனது தணவனை தெய்வமாக மதித்து இல்லறக் கடமைகள் இனிதுற நடாத்தி மகிழ்ந்தவர். உறவினர்கள், அயலவர்கள் ஆகிய அனைவரையும் உபசரித்து உயர்நிலை வாழ்வு வாழ்ந்தவராவர். எவரும் எதிர்பாராத வகையில் திருமதி.தனலக்ஷ்மி அவர்கள் ''வினைப் போகம் ஒழிந்தாற் காயம் தினைப்போதும் நிலையாது'' என்ற சித்தாந்தக் கூற்றிற்கிணங்க இறைவன் திருவடி நிழலை நாடினார். என் செய்வது? விதியை யாரால் வெல்ல முடியும்?

''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்'' எனற யோகர் சுவாமிகளின் திருவாக்கைச் சிந்தையில் நினைந்து ஆறுதல் அடைவோமாக.

அமரர் தனலக்ஷ்மி அவர்களின் பிரிவால் வாடும் கணவர், உடன்பிறந்தோர், மைத்துனர்கள், பெறாமக்கள், சுற்றம், சூழலார் ஆகியோருக்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல வரத்தலம் கற்பக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- தெல்லிப்பழை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய ஆதீன கர்த்தா
சிவஸ்ரீ. இ. சபாரத்தினக் குருக்கள்.

Sivasri R.Sabaratna Kurrukkal
Sothida Kalanithi
290 Hendala Road, Wattala
T.P. 011-2939359



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னை உருக்கி என்னை வாழவைத்த என் இதயக்கமலமே!

இணையான அன்றில்களாய் இணைந்து வாழ்வில்
இருந்தோம்பி இன்றுவரை இருந்தோம் அன்பே!
துணையான உம்மைநான் இழந்து இன்று
துயரிலே மூழ்கியுளேன் துயரைப் போக்கக்
கணவன்நான் என்செய்வேன்? மார்க்கம் இன்றிச்
கண்ணே உம்நினைவைத் தேக்கி என்றும்
எமையாளும் வினாயகன் அருளை வேண்டி
இணையடிக்கே சரணடைந்து இருப்பேன் நானே!

மணமான நாள் முதல் ஓர் குறையுமின்றி வாழ்ந்து வந்தோம். அன்புடனும் பாசத்துடனும் பரிவுடனும் என்னிடம் நடந்து கொண்டீர். ''பாசமுள்ள இடத்தில் கோபமும் இருக்கும்'' என்பார்கள். ஆனால் உமது கோபம் என்னை ஒரு போதும் சுட்டதில்லை - மாறாக ஓர் பாதுகாப்பை, உண்மையான அக்கறையையே உணர்த்தி இருக்கிறது. நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒருவருக்காய் ஒருவர் வாழ்ந்து வந்தோம்.

உறவினர்கட்கு மட்டுமன்றி நாம் வாழ்ந்த சமூகத்திற்கும் தாய் நாட்டிலும் சரி - நைஜீரியாவிலும் சரி உம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வந்தீர். நீர் செய்த உதவிகளின் பலனை உமது இறுதிப் பயணத்தின்போது கண்கூடாகக் கண்டு கொண்டேன். ஆம் அன்பே! எனக்கு முன்பின் தெரியாத எத்தனையோ பேர் உமது இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டு நீர் செய்த உதவிகளைப் பற்றிக் கூறி அழுதபோது உம்மை மணந்த அன்று நான் அடைந்த பெருமையை விட அதிகம் பெருமைப் பட்டேன். ஆனால் அந்தப் பெருமையை, உவகையைப் பகிர்ந்து கொள்ள இன்று நீர் என் அருகில் இல்லையே!

''சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேன்
தோகை வாயகப்பட்ட சர்ப்பமானேன்
காடுதனில் இனம்பிரிந்த மானானேன்
கருங்கடலில் காற்றடித்த கப்பலானேன்
எனக்கு உற்றார் ஒருவர் இல்லாதவனானேன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப்பட்ட நாள்முதல் உமது அருகிலேயே வாழ்ந்திருந்தேன். உம்மைப் பிரிந்தொருபோதும் இருந்ததில்லை. இப்போது என் இறுதிக் காலகட்டத்தில் என்னைத் தனியே தவிக்க விட்டுப் போய்விட்டீரே! என்னை அநாதையாக்கி விடாதீர் என எத்தனை முறை கதறிக் கேட்டிருப்பேன்? உம்மையே உருக்கி என்னை வாழவைத்த உமக்கு இக்கதறல் மட்டும் ஏன் கேட்கவில்லை? விதியின் செயலா? எத்தனை உறவுகள் அருகிலிருந்தாலும் உமது இழப்பை ஈடுசெய்ய எவராலும் முடியாதே!

எத்தனையோ தடவைகள் எத்தனையோ ''விபத்துக்கள்''- என்னை வாழவைக்க வேண்டும் என்ற மன உறுதியால் வெட்ட வெட்டத் தழைக்கும் வாழைபோல் அத்தனையையும் வெற்றி கொண்டு வாழ்ந்து வந்தீர். திடமுடன் இருந்த நீர் திடீரெனச் சென்று விட்டால் நாம் தாங்கமாட்டோம் என நினைத்தா கடைசிப் பத்துமாத காலமாக மெல்ல மெல்ல உம் பிரிவிற்கு எம்மைத் தயார்ப்படுத்தினீர்? அன்பே! எண்ணிலடங்கா நினைவுகள் என் நெஞ்சில் நிழலாடுகிறது. எல்லாம் எழுத இத்தாள்கள் போதாது.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து இறைவன் திருவடிகளில் இளைப்பாறச் சென்றுவிட்ட என் இதயக்கமலமே! நீர் விட்டுச் சென்ற உடலுக்கு என்னால் முடிந்தளவு சிறப்பாக எங்கள் பாரம்பரிய முறைப்படி இறுதிக் கடமைகளை செய்து முடித்துவிட்ட திருப்தியுடன் நெஞ்சை விட்டகலா உமது நினைவுகளுடன் என் துயரை மனதின் ஓரத்தில் இருத்தி உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொண்டு உமது காலடிகளில் என் கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

- உம்முடன் விரைவில் இணைய
ஆவலுடன் இருக்கும் உம் கணவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *An appreciation......*

It was the year 1958 and Zahira College, Dhargo Town, founded just a few years ago, was developing its secondary section when Thanaluxmi Manickam (later Thanaluxmi Lankanathan) walked into the school as the first full-fledged Biology Teacher. She was young, energetic and fresh from the University.

The school was an Assisted School with English as the medium of instruction and had moved into its beautiful new premises.. Although independent in its management it derived its inspiration from other Zahira Colleges in Colombo, Gampola and Puttalam. Mr. Shaffie Marikar as its Principal was determined to develop it into an excellent center of education with all facilities. It drew its student population from all parts of Sri Lanka.

Into this set up "Manickam teacher", as she was lovingly called by the students and the staff, moved in and started her teaching career with enthusiasm and skill. She had the responsibility of teaching Botany, Zoology and Science, building up the Biology section and presenting students for the G.C.E (O/L) examination in the English medium. She was an instant success as a teacher with her exuberant and colourful personality. Students loved her teaching and we could see genuine rapport developing between her and the students. Teaching of Biology needs special skills in the teacher such as drawing illustrative diagrams, displaying suitable charts, collecting specimens, gathering instruments, building bridges in the minds of students between what is learnt in the classroom and the flora and fauna of the natural world outside. Her enthusiasm for her subject was infectious. Students joined her in her field trips, excursions and tours. With her unassuming and friendly ways she was a favorite among the staff too. Disharmony among the staff was unheard of. Those were days when private tuition was not heard of. Conducting special classes for students who needed them



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was no strain on her. She considered it as part of her duty towards the student. Her results were excellent in the public examination.

She was also one of the teachers looking after the Junior Hostel. Hostellers being young and away from home found in her a friendly mother and companion. In this capacity she and other teachers in the hostel contributed much towards building up the school, the character of the children and their religious life.

In the late sixties the school had grown up to have G.C.E. Advanced level classes, and she was the first Biology teacher for AL classes. She took up her responsibilities with full confidence and commitment. Meanwhile the school became the victim of political wrangling and was reestablished in 1965. Soon after she met her life's partner Mr.Lankanathan who joined the school as Physics teacher. They found in each other a delightful cordiality that was consummated in their marriage to the great joy of everyone. Theirs has been an exemplary married life sharing the joys and sorrows, the sunshine and the shadows, lifting up each other's spirit and graciously meeting the challenges of health as years passed by.

They moved to Colombo in 1973. She started teaching at Muslim Ladies College and he at Royal College. Later Mr. Lankanathan joined the Educational Administrative Service and was appointed to the Department of Examination. They spent around ten years teaching in Nigeria, too. Even there she faced severe illness and by the sheer grace of God narrowly escaped death. After they returned to Sri Lanka she was not very keen to take up any regular job. Her commitment was towards her home, her husband and her immediate family. As years passed by her health began to decline. Her husband lavished on her the best possible medical attention and super human personal care for months together. But the inevitable happened.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

She leaves behind a rich memory of her life. Many of her students who have now established themselves as Teachers and Principals of schools, Lecturers and Professors, leading businessmen and Doctors are united in their grateful tribute that in their achievements in life she has played a significant part as a superior teacher and an inspiring guide.

My family has known her nearly fifty years. She and her husband have been very close to us. Though our professions brought us together we have come to love and admire her for her deep religious life, her natural goodness, her genuine affection and her sincere concern towards our welfare. She has been an affectionate sister to my wife and a loving "anta" to my children, her nephews and nieces. Rarely will they find another "anta" to take her unique place.

Deeply etched in our hearts remain memories of her beautiful personality, and a vacuum no other human can fill. Physically no more with us she is immortal in that she lives in the loving memory of her students, her loved ones and her friends. May God console Lankanathan and may he find solace in the memory of their beautiful life together.

- S.G.Samuel

Former Vice Principal
Zahira College, Dharga Town.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புச் சகோதரியே!

தாயை இழந்தோம் சிறுவயதில்
தங்கையாய் தவழ்ந்தாய் என்மடியில்
வளர்ந்தாய் என்னுடன் என்னுயிராய்
வாழ்ந்தோம் நாமே அன்புடனே.

என் குழந்தைகளை உன் குழந்தைகளாய்
வளர்த்தாய் அன்புடனே
குறையின்றிக் கரைசேர்த்தேன் உன் தயவால் நானன்றோ!

என் "அம்மா" என்றாயே உன்மனதால்
தவிக்கின்றேன் நீயின்றித் தனிமையிலே
நீயில்லா குறையினை இனி யார் தீர்ப்பார்
உனை நான் மறவேனே என் வாழ்வினிலே!

- அன்புச் சின்னக்கா
ஞானேஸ்.

## என் ஆசைத் தனன்ரா!

அன்பான தனன்ராவே
தாய் தானே நீங்கள் எனக்கு
மகளாக நீங்கள் என்னை
வளர்த்தீர்கள் அன்புடனே

என் துக்கம் சுமந்தீர்கள்
என் துயரைத் துடைத்தீர்கள்
என்வாழ்க்கை வசந்த முற
நீங்களே உருகினீர்கள்

மனமுடைந்து நான் வந்தால்
ஆறுதல் சொல்ல இருந்தீர்கள்
உங்கள் மலர்ந்த முகம் நான்பார்க்க
நீங்கள் இல்லையே இப்பொழுது!

- அன்புப் பெறாமகள்
தயானி (தயா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *In Appreciation of a loving aunt.*

My memories date back to my early childhood days when I was a 3-4 year old. The aunt I fondly remember as "Chinna (small) Mami (aunt)".

She was an angel of love and a person who would embrace any child with her passionate ways. There were days when they were living together at our residence in Colpetty, at night I used to get off my little couch and climb on to her bed in anticipation of listening to bedtime stories and to chat with her. She would always find time to play with me amidst her busy schedules.

Her love towards us (children) grew day by day. When she was teaching in Aluthgama I used to await her return during the weekends eagerly in order to play with her and share my little adventures. She was a magnanimous person who can cheer up anyone through her loving and caring ways. Her love and care extended to all her nephews and nieces and many children of her relatives and was not restricted to a privileged few like me.

I still remember how she follows up on our school performance with much interest in order to advise and guide us. Being from the teaching profession she used to enjoy this work whilst meticulously performing same.

I had several opportunities of interaction with her. The times I could clearly remember was when I was a kid aged 12 years when my uncle and aunt were staying at Soysapura flats (closer to our home). My responsibility was to buy bread from the boutique for both of our families in the evenings. I used to do this with much delight, as every time I came to their home I was petted and fed with a scrumptious treat. This is an example to the kind of affection she had on us.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Later on when both my uncle and aunt went overseas to Nigeria for employment we would still exchange regular mail which contained boundless affection. She would still continue to know about the progress in our education through mails and advise us. I still remember the encouragement we all received from her on our achievements. During the difficult times we received more of this, which kept us going.

I feel that my personal achievement in life was mainly due to the encouragement and advice that I received through many persons like her. Repaying such debt is impossible in ones lifetime.

I will consider my self at least a little lucky in the sense that I was able to visit her more frequently in the last few years and express my gratitude in humble words and deeds. I will cherish my last ever encounter (before her demise) when I visited her with my wife soon after our marriage. During this visit "Mami" enthusiastically explained to my wife my childhood adventures and her experiences with me as a toddler. At that time I thought to my self that we would be able to visit her more often in the future with a larger family and keep her happy, specially as she loved kids.

However God had his own plans. God loves to take the best of people from this world much in haste for his work in heaven. I had such similar emotions when I lost my own mother unexpectedly. I wish to take leave after leaving these thoughts behind.

"Most people live to make happiness but a few live to give happiness and the only difference being that the latter few are remembered forever, whilst the rest of them get forgotten soon"

"Chinna Mami" was a living example of this few.

Let us all jointly pray for her soul.

- Nephew

Wiknesh.N
Battaramulla,
Colombo.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

இந்த வையகத்தில் திரு. மாணிக்கத்திற்கும் திருமதி தங்கலக்ஷ்மிக்கும் 1933ம் ஆண்டு ஜூன் மாதம் 2ம் திகதி சிம்மராசியில், மூன்றாவது தாரகையாக உதயமானார் எங்கள் தனலக்ஷ்மி.

தனது இளமைப் பருவத்தில் கல்வியில் சரஸ்வதியின் கடாட்சம் பெற்று பல்கலைகளிலும் சிறந்த மாணவியாகத் தன் பெற்றோருக்கு பெருமையும் புகழும் குவியச் செய்தார் நம் தனலக்ஷ்மி. 1968ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி திரு. இலங்கநாதனுடன் பார்போற்றும் வகையில் இல்லறமே நல்லறம் என்று இல்லற வாழ்வில் ஈடுபட்டார் எங்கள் கற்புக்கரசி தனலக்ஷ்மி!

தான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்ற நற்கூற்றினை மனத்திற்கொண்டு, தான் பெற்ற சரஸ்வதியின் கடாட்சத்தினை இந்த நாடும், வையகமும் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஆசிரியராகத் தொழில் ஏற்றார் எங்கள் குலமகள்.

தர்கா நகர் ஸாகிரா கல்லூரி, கொட்டாஞ்சேனை நல்லாயர் அரசினர் தமிழ் மகா வித்தியாலயம், பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளில் விஞ்ஞானம், உயிரியல் போன்ற பாடங்களை சாதாரணதர மாணவர்களுக்கும் தாவரவியல், விலங்கியல் போன்ற பாடங்களை உயர்தர மாணவர்களுக்கும் கற்பித்த வந்தார்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களுக்கும் அதிபதியாய், திரு.இலங்கநாதனுக்குச் சிறந்த பத்தினியாய் தமது மாணவர்களுக்கு ஒப்பிலாக் குருவுமாய் சிம்மராசியில் பிறந்த எங்கள் தனலக்ஷ்மி சிம்ம வலம் வந்தார். இந்த வையகம் போற்ற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சேவை மகேசன் சேவை என்று வாழ்ந்து வந்த எங்கள் தனலக்ஷ்மி ஒரு மெழுகுவர்த்தியைப் போல் பிறருக்கு ஒளி சேர்த்தார். ஆனால் தன் உடல் நிலையைக் கருத்திற் கொள்ள மறந்தார். இதன் விளைவாக 1989ம் ஆண்டு நைஜீரியாவில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு தன் சுயநினைவின்றிய (Coma) நோயாளரானார்.

1994ம் ஆண்டு பிறருக்காக வேதனைப்பட்ட எங்கள் தனலக்ஷ்மியின் இதயம் நோவால் பாதிக்கப்பட்டது. தன் மானிட சேவையை தொடர சித்தம் கொண்டு நோய்கள் அனைத்தையும் வெற்றி கொண்ட எங்கள் தனலக்ஷ்மியை, எம்பிரான், 'நீ இவ்வையகத்தில் ஆற்றிய பற்றற்ற தொண்டு போதும்' என்று நினைத்தான் போலும்; 2005ம் ஆண்டு மே மாதம் மரணப்படுக்கையில் வைத்தான். அந்த மரணப்படுக்கையில் இருந்து மீட்புறாமல் 2006ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி எங்கள் தனலக்ஷ்மி இறைவனடி சேர்ந்தார்.

பார்போற்ற இந்த பரணி போற்ற வாழ்ந்த எங்கள் தனலக்ஷ்மியே! உன்னால் போதனை பெற்ற பல்லாயிரக் கணக்கானோர் இந்தப் பூமிபோற்ற வாழ்கின்றார்கள். அவர்கள் மத்தியில் நீர் சாகவரம் பெற்று வழிகாட்டியாக வாழ்ந்து கொண்டே இருப்பீர்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- Prof.Dr.Sir Selva Selvakumar (Dr.Ac)
Dr.Svetlana (ஸ்வெற்லனா)
G.Sarantchouk Ph.D (Dr.Ac)

DEVI CLINIC and faculty
of Integrated Medicine,
16 Glenaber Place,
Colombo - 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது இனிய சின்ன மாமி

அழகான சிரித்த முகம், அன்பான பேச்சு, அமைதியாக கம்பீரமாக எல்லோருடனும் பழகும் சுபாவம் - எங்கள் கண் முன் வந்து நிற்கும் மாமி - எங்களுடன் இப்போது இல்லை.

எல்லோருக்கும் உதவும் குணம், பிறர் துன்பப்படும் போது தனக்கு நேர்ந்தது போல் எண்ணி, சொல்லிக் கவலைப்படுவது, இரங்குவது இவை மாமியின் அடிப்படைக் குணங்கள். இதனால் தான் மாமி எல்லோரினாலும் நேசிக்கப்பட்டார். நண்பர்களாகட்டும், உறவினர்களாகட்டும், இவரை பிடிக்காதவர்கள் இல்லை.

எங்கள் சிறுவயதில், நீங்கள் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வரும்போது அது எங்கள் எல்லோருக்கும் கொண்டாட்டம் தான் - திருவிழாதான்! நாங்களும் வருவோம் கொழும்புக்கு என Suitcase உடன் வந்து நின்று அடம் பிடிப்பதும் ஞாபகம் வருகிறது. சிறுவயது முதல் எங்கள் வீட்டு இன்ப துன்பங்கள் எல்லாவற்றிலும் முன் நின்று எங்களுக்கு இன்னொரு அம்மாவாக வாழ்ந்தீர்கள். அம்மாவின் மறைவிற்குப் பின் எமக்கு வழிகாட்டியாக இருந்தீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும் உங்கள் நினைவாக என்றும் வாழும்

- அன்பு மருமக்கள், மக்கள்

ஜெயந்தி, ஜீவன்
சுகந்தி, நவீனன்
கோமளா, கிருபராணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனாப் பாட்டி!

நீங்கள் சாமியிடம் போய் விட்டதாக அம்மா சொன்னா. இலங்கை வந்த போது உங்களுடன் விளையாடினேனே; Telephone இல் உங்களுடன் கதைப்பேனே!

- என்றும் என் தனாப்பாட்டியை
நினைக்கும் அன்பு பேரன்
பிரணவன்.

## எனது அன்புச் சின்னமாமி

சில மாதங்களுக்கு முன்னர் எமது அருமை சின்னமாமி மாரடைப்பால் நோய்வாய்ப்பட்ட துயரொணாச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் கொண்டோம். 2003ம் ஆண்டு எனது பெரியம்மாவையும் அதனைத் தொடர்ந்து 2004ம் ஆண்டு எனது அன்னையாரையும் இழந்து வேதனை சிறிது சிறிதாக மறைந்து கொண்டு வருகின்ற இவ்வேளையில் சின்னமாமியும் காலமான செய்தி என்னை வெகுவாகப் பாதித்துள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் எனது தாய்க்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்து எம்மை அன்புடனும் ஆதரவுடனும் கவனித்து வந்தது எமது சின்னமாமிதான் என்றால் அது மிகையாகாது. எமது பாடசாலை விடுமுறைகளின்போது எமக்கு விஞ்ஞான பாடத்தை சற்றும் சளைக்காமல் தொடர்ந்து புகட்டி இப்பாடத்தில் எம்மை மிளிரச் செய்ததை நாம் என்றென்றும் மறக்கவே முடியாது. நாங்களென்றால் என்ன, வேறெந்த உறவினரின் பிள்ளைகளென்றால் என்ன தங்கள் பிள்ளைகள் போல அன்போடும் ஆதரவோடும் பழகுவதிலும் மற்றும் கல்வி சம்பந்தமான விடயங்களில் தகுந்த ஆலோசனைகளை வழங்கி எம்மைக் கண்டிக்க வேண்டிய நேரத்திற் கண்டித்து அன்போடு பழகுவதிலும் இவருக்கு நிகர் இவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் ஜீவராசிகள் பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள்; மடிகிறார்கள். இதுவே உலக நியதி! எனினும் அவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே எமது மனத்தில் என்றும் இறவாவரம் பெற்று நிலைத்துள்ளனர். இவ்வகையில் இந்தச் சிறியேனுடைய மனத்தில் காலஞ் சென்ற எனது சின்னமாமியும் என்றென்றும் அழியாதிருப்பா.


எனது சின்னமாமியின் சமையலை என்னால் என்றென்றும் மறக்கவே முடியாது. அவ சமைத்த உணவை உண்பதென்றால் எங்களுக்கு ஒரே குஷிதான். எமது வீட்டுக்கு அருகாமையில் மாமியின் வீடு இருக்கையிலும் வசதிப்படும் போதும், நானும் எனது தம்பியும் இவர் சமைத்த ஆகாரத்தை சப்புக் கொட்டி உண்பதை என்றுமே மறக்க முடியாது.

எமதாகட்டும் எந்த உறவினராகட்டும் அவர்களின் வருத்தம், துன்பம், நல்லது, கெட்டது அனைத்திலும் பங்கேற்று உறுதுணையாக நின்று உதவி புரிவதில் மாமி சற்றும் சளைத்தவரல்ல. எமது சின்னமாமி எமது மாமாவிற்கு தோள் கொடுத்து வெகு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தது மட்டுமல்ல சுமங்கலியாகவே உயிர் நீத்துள்ளார்.

இவரின் பிரிவைத் தாங்கும் சக்தியை எமது சின்னமாமாவிற்கு எல்லாம்வல்ல இறைவன் வழங்குவாராக. அத்தோடு சின்னமாமியினாருடைய ஆத்மா இறையருளினால் இனிதே சாந்தியடையத் தொடர்ந்தும் பிரார்த்திக்கின்னோம்.

- அன்பு மருமகள்

மீரா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு ஆசைஅம்மம்மா!

தீபச் சுடராய் ஒளிகொடுத்தீர்கள்
தீபம் அணைந்ததால் இருளில் தவிக்கின்றோம்
பாசம் ஊட்டி நீங்கள் வளர்த்தீர்கள்
இன்று உங்கள் பாசம் ஊட்ட யாருமின்றி
உங்கள் நினைவுகளை மட்டும் நெஞ்சில் சுமக்கின்றோம்

நிஜம் இன்று நிழலாய் போனதால்
மனத்திற்குள் நாமே ஏங்கித் தவிக்கின்றோம்
மீண்டும் உங்களை ஆசைஅம்மம்மா என்று அழைக்கத்
- துடிக்கின்றோம்
ஆனால் வழியின்றி மனதிற்குள் குமுறுகின்றோம்.

நம்மீது பொழிந்த பாசம் போதுமென்று
வஞ்சித்தவன் கடவுளன்றோ
அவன் செய்த குற்றத்தைத் தண்டிக்கவேண்டும் இக்கணமே

பாவம் அதை அறிந்திடாத, பாசம் மட்டும் அறிந்திட்ட
சிரித்த முகம் மாறாத எம் ஆசை அம்மம்மா
எமக்கில்லை இனி எப்பொழுதும்.

நாம் கல்வியிலே முன்னேற காலமெல்லாம் பாடுபட்ட
எம் ஆசை அம்மம்மா இன்று இல்லை எம்முடனே
நாம் நோயால் துடித்திடவே அதைக் கண்டு துடித்த மனம்
பிடித்ததனால் காலன் எம் ஆசை அம்மம்மாவை கொண்டு
- சென்றானோ.

நம் கவலைகளும் கண்ணீரும் உங்கள் அன்பிற்கு ஈடில்லை
ஊக்கமளித்த எம் ஆசை அம்மம்மா இன்று உயிருடன்
- இல்லை நம்மோடு
அவர் தந்த ஊக்கத்தை எவர் தருவார் இனி எங்களிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமென்ன நேசமென்ன பஞ்சமின்றித் தந்த
எம் ஆசை அம்மம்மாவை "ஆசை அம்மம்மா" என்று
நாம் வாஞ்சையுடன் அழைத்திடவே இனி யார்வருவார் அவர்
- போலே

பட்சணங்கள் பல செய்து பாங்கினொடு அதை ஊட்டி
பாசத்தை பொழிந்திட்ட எம் ஆசை அம்மம்மாவைப் போல்
யாருள்ளார் தரணியிலே.

- பாசமிகு
பேரப்பிள்ளைகள்

மைதிரேயி, மதுரமி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் சிறிய தாயே!

என்னை ஈன்றெடுக்காததைத் தவிர வேறென்ன வேற்றுமை கண்டேன் உன்னிடம். என் அன்னையைவிட பாசத்தை ஊட்டி பரிவில் நீராட்டி, பாங்காய் பல புத்திமதியுரைத்து என்வாழ்வின் உயர்வுக்கு வகுத்தாய் நீதான் ஓர் பாதை.

நீர்த்துளிகள் பெருகி என் விழித்திரையை மூடி நிற்க நிழலாகப்படர்கிறது அந்த நாள் நினைவெல்லாம். ஓர் இரண்டா அதைக் கட்டமிட்டு நான் சொல்ல. என் நினைவலையில் மிதக்கும் சிலவற்றை மீட்டுகிறேன்; தேங்கிநிற்கும் கண்ணீர்க்கு ஓர் வடிகாலாய் அமைவதற்கு.

விடுமுறைக்கு வரும்போது பல பொருட்கள் வாங்கிவருவாய், பந்தென்ன, வர்ணக்குடை என்ன, விசிலென்ன, சாவிகுடுக்கும் குரங்கென்ன எதைச் சொல்வேன்; மறக்கவில்லை இன்னும் அவற்றை. அக்காவுக்கும் அதுபோன்றே பல வேறு; ''என் இரு கண்கள் தயா, சுஜி'' என்றிடுவாய் வாய்க்கோர் தடவை. சிறுவயதில் பாவியேன் இளைப்பு நோயல் துடிக்கையிலே நெஞ்சோடு அணைத்து வைத்து உன் மூச்சைத் தந்திடுவாய். நீ குந்தி இருக்கையிலே இதமாய் குடங்கி இருப்பேன் மடியினிலே இளைப்பு நோய் தாங்காமல். ''மாறிடும்'' என்று சொல்லி நெஞ்சை வருடி வருடி தேற்றிடுவாய் அன்பு மொழியால்.

கால் கழுவி பல் விளக்கி படுக்கையிலே சொல்லிடுவாய் பப்படவாயன் கதை. ஒருபுறம் அக்காவும் மறுபுறம் நானும் விடமாட்டோம், உன்னை விட்டு அகலமாட்டோம் விடுமுறை விடும் வரை இன்று போல் இருக்கிறது அந்த நினைவு.

விடுமுறையும் முடிந்து விட பயணம் போகும் நாளன்று பலிக்கடாவாய் நின்றிடுவேன் நான். அழுது, அழுது துவண்டு கட்டிலிலே சுருண்டு பிரெண்டெழும்ப, நீ வந்து தடவிவிட்டு காசு சதம் இருபத்தைந்து தந்திடுவாய் அழ வேண்டாம் என்று சொல்லி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கிறதே என் நெஞ்சு, வடிகிறதே அருவியென கண்ணீர். நீ இல்லை துடைத்துவிட தொலைதூரம் போய்விட்டாய் எம்மை விட்டு. வருவாயா காசுதந்து தேத்திவிட?

விடுமுறைக்கு மீண்டும் வந்து 'அ' எழுத அழகாகத் துவக்கி வைப்பாய், மறுதடவை வருகையிலே எழுதிடுவேன் தலைகீழாய் 'அ'னாவை, அலுக்காமல் அன்பாய் புகட்டி வைத்தாய் அரிச்சுவடி. இன்று வடியும் விழிநீரில் நனைகிறது என் அரிச்சுவடியால் கோத்த இக்கடிதம்.

தம்பி என்று பிறந்திடவே ஓர் சுட்டிப்பையன் ராணி அன்ரிக்கு, வைத்தனர் ஓர்பேர் ''சுப்பிரமணியம்'' என்று. குழந்தை அவன் வளர்ந்த பின்பு அவன் கால வழக்கத்திற்கு ஒத்துவராதே இப்பெயர் என்று செல்லமாய் கூப்பிடுவோம் அவனை 'சுப்றா' என்றாய் சிந்தித்து. அறிந்தாயோ அன்று கனடாவில் வெள்ளையனும் கூப்பிடுவான் அவனை சுகமாக சுப்றா என்று.

சுற்றிவர குழந்தைகள் எல்லோரும் உன் செல்வம் என அணைத்திடுவாய். அக்காவின் தயா, சுஜி; ராணியின் சுப்றாவுடன்; ஜெயந்தி, ஜீவன், சுகந்தி, நவீன், மூத்த மைத்துனிக்கு வாய்த்த செல்வங்கள்; குறையாத அன்புடனே மீராவும், விக்னாவும் இரண்டாவது மைத்துனிக்கு; அண்ணைக்கு நந்தா, கணேஷ் என இரு கண்கள்; வாகீசன், வாசுகி அது மகேஷிற்கு; புவனேசின் ஈசா, ரஞ்சி, பெரியதம்பன், சின்னத்தம்பன், லக்கி; இவற்றுடனே மறப்பதில்லை பெரியம்மாவின் மலரையும் நீ. அத்தனைக்கும் சமமான அன்பு. இத்தனையும் இருக்கையிலே எனக்கு எதற்கு என்று விட்டுவிட்டாய் உனக்கென்று ஒன்று.

பகிடி என்றால் பால்பாயாசம் உனக்கு. நாடகமும் நடிப்பேன் என்று என்னை ஒன்று எழுதச்சொல்லி எனக்கொரு சேவகனாய் நடித்து ஒலிப்பதிவும் செய்து என்றும் கேட்டுச்சிரிப்போமே! இன்று எங்ஙனம் அக்குரல் கேட்பேன்? பொங்கி வரும் பெருவெள்ளம் என பாய்ந்திடுமே கண்ணீர்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுச் சாதாரணதரம் தன்னை சட்டை செய்யாச்சிறுவனாய் விளையாடித்திரிகையிலே அன்னையின் துயரம் கண்டு ''அக்கா அவனை இங்கே அனுப்புங்கோ'' என்று வார்த்தாய் என் அன்னைக்கு நெஞ்சில் பால். எங்கு சென்றாலும் கண்ணை இமை காப்பது போல் பேணி வந்தாய் என்னை. உன்னைவிட உயரமாய் வளர்ந்திருந்தாலும் பிடித்தகை விடாது நெடுஞ்சாலையை கடப்பாய்.

வெயிலோ மழையோ படாமல் கலைத்து கலைத்து குடைபிடிப்பாய். குடைக்கம்பி குத்தி என் தலைமயிரை குழப்ப, சினமுற்று வேகமாய் நடப்பேன் நான் - விடுவாயா?

ஒரு கையில் கைப்பையும் புத்தகமும், மறுகையில் எனக்கு குடை; வழியும் வேர்வையோ தன்வழியில். வழிகிறதே என் நெஞ்சம் உருகி இன்று கண்ணீரால் அந்த அன்பை எண்ணி. தருவாரோ வேறெவரும் அதற்கு இணையாக?

கல்லூரி முடிந்தபின் 'கொட்டகேனா'வில் பஸ் ஏறி நெரிபட்டு, இடிபட்டு உயிரின்றி வீடு வந்து உயிரியலை படிப்பிப்பாய் கேள்விக்கு வருமென்று. உன் கரிசனையில் அமிழ்ந்து போன நானும் வழியின்றி எடுத்துவிட்டேன் திறம்படச் சித்திகளை பரீட்சையில்.

உயர்தரம் படிக்க என்று வீடு சென்ற நானும் ஏறிவிட்டேன் முருங்கைமரம் மீண்டும். நீயும் அறிந்து மீண்டும் என்னை அழைத்தாய் ஆசையோடு.

குளிரூட்டும் தொழில் நுட்பம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து என்று படிப்பதற்கே கட்டி விட்டாய் காசு. நானும் பொறுப்புணர்ந்தே வந்தேன் உன் அன்பின் பிடியினுள். மாநகரம் கொழும்பு தன்னில் வீடு இன்றி அங்கும் இங்கும் மாறும்போது பூனை தன்குட்டியென காவிச்சென்றாய் அன்போடு. ஒரு தனி அறை எனினும் எனக்குமோர் இடம் தந்து, ''எள்ளோடு சேர்ந்து எலியெச்சம் காயிது பாவம்'' என்று சொல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் இடுக்கண் மறந்து மன் இடுக்கண் நோக்கும் மாசற்ற சோதியே நீ அன்றோ வையத்துள் தெய்வம்.

கஷ்டங்கள் பல கடந்து கடைசியாகக் கண்டறிந்தோம் மொறட்டுவவில் அடுக்குமாடி வீடு ஒன்று. மைத்துனியும் அருகிருக்க நல்ல இடம் என்று அமைத்திட்டோம் அழகாக ஒரு வீடு. இன்று மைத்துனிகள் சென்ற இடம் காண்பதற்கு சென்று விட்டாய் மறு உலகம்.

சுகமாக இருக்க வென்று குடியேறிச் சில நாளில் சென்று விட்டாய் நைஜீரியா. உன்னை பருந்து போல் தூக்கிச் சென்ற விமானத்தை மறையும் வரை பார்த்திருந்து விக்கி விக்கி வீடு வந்தேன். யார் உணர்வார் என்துயரம் இன்று ஆவியெனச் சென்று விட்டாய் என்றறிந்து.

ருசியான பண்டம் கண்டால் பயந்தபடி பார்த்திடுவாய் சித்தப்பாவை! ''சின்னத்துண்டு தானே! என்றும், ஒரு நாள் தானே'' என்றும் சுவைபார்ப்பாய் சிலவற்றை. எத்தனை தான் கவனம் எடுத்து என்னபயன் நாம் கண்டோம்? கால் அதனில் சிறு அரிப்பு இருந்ததிலே யாரும் காணாத வேளைதனில் சுவையாகச் சொறிந்திடுவாய். புண்ணாகிவிடும் என்று சித்தப்பா பார்த்தவுடன் ''அது சும்மா ஒன்றுமில்லை'' எனக்குழந்தையாய் குழைந்திடுவாய், குற்றமற்ற குணக்குன்றே.

மகன் என்று நான் துணையாக இருந்த தெம்பில் குறையின்றி இருந்துவிட்டாய் சிலகாலம். மனம்மாறி நானும் கனடா ஏகிவிட கலங்கி விட்டாய் இனியார் எனக்கென்று. இதயமே இடிந்தாலும் இதமாக நீ உரைத்தாய் ''எதிர்காலத்திற்கு நல்லதென்றால் போவேன்'' என்று பிரியும் நாள் அன்று பார்த்திருந்தாய் என்னுருவம் கண்வேட்டாது. கடைசிவேளை ஆரத்தழுவி உச்சிமுகர்ந்து முத்தமிட்டாயே! என்னென்ன நினைத்திருப்பாய் அவ்வேளை? பெருமூச்சாய் விட்டிருப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை, வேறென்ன? நான் போன துயரம் தாங்காது சிலகாலம் சென்ற பின்பு உன் இதயம் தன் துடிப்பை மறந்ததுவோ? காலன் அவன் கணக்கும் முடிந்ததுவோ?

கவர அவன் வரும் பொழுது கேட்டிருப்பாய் ''பொறு 10 மாதம் - சுஜி வரட்டும் வாறன்'' என்று. என் கருணையின் திருவுருவை காண்பேனா கட்டிலிலே அசையாத சிலையாக? கோலமது மாறி குரலின்றி, உணர்வின்றி நீயிருக்க நான் பார்த்ததில்லை. அது என் பாக்கியமே! என் மனத்திரையில் என்றும் நீ நிறைவான தனம் அன்ராதான்!

விக்கித்து நிற்கின்றேன் கல்லொன்று நெஞ்சில் கரையாது நிற்கிறதே. 'ஓ' வென்று அழுதிருந்தால் உணர்ந்திருக்கேன் அவ்வலியை. யாரிடம் தான் நான் சொல்வேன் என்னுணர்வை பங்கு போட. நேரம் அது சென்று வீடு வந்து சேர்ந்தால் ஏங்கிநிற்கும் உன்பார்வை ''பயந்தல்லோ போட்டன்'' என்பாய் பொய்க்கோபம் கொண்டவளாய்.

தாய்மையின் இருப்பிடமே, தனக்கென்று வையாக் கொடையுளமே, கபடம் தன்னை கடுகளவும் கொள்ளா குணக்குன்றே, வெளுத்ததெல்லாம் பால் என்று பாவம் பார்க்கும் பாங்கினளே, பண்பின் பாசத்தின் திருவுருவே, இதுவல்ல உனக்குகந்த இடம். போ..... போ..... இருக்கிறது தேவலோகம் உன்போன்றவர்களுக்கு.

உன் உடலை எரிக்கும் வேளை நான் கிடந்தேன் கனடா முத்து மாரி அம்மன் காலடியில். கதறி அவரிடம் கேட்டேன் ஒரு வரம் ''உன் பூவுடலை நோகாது எரித்து விட்டு திருக்கரம் கொடுத்துக் கூட்டிச் செல் என் தாயை விண்ணுலகம்'' என்று. நிட்சயமாக உண்டு உனக்கோர் தனியிடம் அவ்வுலகில். வெள்ளைப்புறாவாக பஞ்சு முகில் தாவித் தாவி பசுமையாய் நீயிருப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கண்கள் மட்டும் பார்க்கும் எம்மவரை நல்லாசிதனை வழங்கி வைக்கும் உன்னிதயம் அங்கிருந்தே.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் தெய்வத்தில் மதிக்கப்படும் என்தாயே! மலர் கோடி தூவித் துதிக்கின்றேன் உன் பாதம்.

- J.Sujanthan
Canada.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அருமை மதனி

1969ம் ஆண்டில் எங்கள் வீட்டிற்குப் புதிய மலர்ச்சி ஏற்பட்டது - வீட்டுச் சூழ்நிலையே கலகலப்பாக மாறியது - காரணம் எனது சின்ன அண்ணாவின் திருமணம் நடந்து அவரின் மனைவியின் வருகையால் ஏற்பட்ட திருப்பம்.

அழகிய சுருண்ட நீளமான கருநீலக்கூந்தல், வெண்ணிறமான தோற்றம், என்றும் புன்னகைபூத்த வதனம், அழகிய கண்கள், கனிவான அமைதியான பேச்சு அடங்கிய, அன்று நான் பார்த்த அவரின் தோற்றம் இன்றும் என் மனதில் பசுமரத்து ஆணிபோல் பதிந்து நிற்கிறது. இதனால் எனது அண்ணா மிகக் கொடுத்து வைத்துப் பிறந்தவர் என்று எனக்குள் மிகவும் அகமகிழ்ந்து போனேன்.

அவர் வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் ரசித்து மகிழ்ந்து வாழக் கூடிய மனப்பக்குவங் கொண்டவர். எல்லாக் குழந்தைகளுடனும் அன்பாகப் பழகுவார்; சரளமாகப் பேசுவார். அதனால் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் எல்லோரும் அவருடன் சுலபமாக ஒட்டிக் கொள்வார்கள். குழந்தைகள் மீதான பிரியத்தினால் விடுமுறைக்கு வரும் போதெல்லாம் நிறைய விளையாட்டுச் சாமான்கள், தின்பண்டங்கள் கொண்டு வருவார். இதனால் நாங்கள் எல்லோரும் அவரை SANTA CLAUS என்று கேலி செய்வோம்.

பெரியவர்களுடன் மிகவும் மதிப்பும் மரியாதையுமாகப் பழகுவார். வயதானவர்கள் மிகவும் தளர்ந்த நிலையில் இருக்கும் போது மிகவும் அன்பாகப் பணிவிடை செய்வார். இதனால் என் அன்னையார் அவரது இறுதிநாட்களில் தனது பெறாமகளான மருமகளுடன் நேரம் கழிப்பதையே பெரிதும் விரும்பினார்.

குழந்தைகள், பெரியவர்கள் உடன் மட்டும் அல்லாமல் வீட்டில் வளரும் பிராணிகளுடனும் மிகவும் அன்பாகப் பழகுவார். விருந்தோம்பலில் அவருக்கு நிகர் அவர்தான். சுவையான உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகள் தயாரிப்பதில் வல்லவர். பரிமாறும் போது சிரித்தபடி பரிமாறி விருந்தினர்களை மகிழ்விப்பார்.

எனக்கு அவர் ஒரு உகந்த தோழி - நான் கேட்காமலே எனக்குத் தேவையானவற்றைச் செய்வார். விடுமுறைக்கு வரும்போதெல்லாம் எனக்குப் பொருத்தமான துணிகள் வேண்டி நல்ல Pattern இல் தைத்துக்கொண்டு வருவார்.

இப்படி என்னைக் கேளாமலே என் மனம் அறிந்து செய்த உதவிகள் எண்ணிலடங்கா. இனிமேல் இவ்விதமாக என்னிடம் அன்பு செலுத்த யாருள்ளார்?

எங்கள் குடும்ப நலன்களில் ஊக்கமும் துடிப்பும் கொண்டவர்; தன் கடமைகளில் உயர்ந்து நின்றார். தன் உறவினர் உயர்விலும் மகிழ்ச்சி கண்டார். எங்கள் குடும்பத்து பிள்ளைகளின் எதிர்கால நலனில் மிகுந்த அக்கறை காட்டினார். தான் வாழ்ந்த காலமெல்லாம் எமது குடும்பத்திற்கு பெருமை, உயர்வு, தேடித்தந்தவர். ஆனால் அவர் இன்று இல்லை.

உலகில் உயிரினங்கள் அனைத்தும் பிறக்கின்றன; இறக்கின்றன. மரஞ்செடி, கொடி, புல், பூண்டு உயிர்க்கின்றன; அழிகின்றன. மாந்தரும் வருகின்றனர்; போகின்றனர். இது உலக நியதி. இயற்கையின் விளையாடல்களில் ஓர் அங்கம். எனினும் உலகில் பலர் வாழ்ந்து மறைந்தனர், மிகச் சிலர் மறைந்தும் வாழ்கின்றனர். இப்படி மறைந்தும் மறையாத தெய்வமாக எமது அருமை மதனி எமது உள்ளங்களில் திகழ்கின்றார். அவரது ஆத்மா இறைவன் பாதங்களில் அமைதிபெற சாந்திபெற பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- என் உயிருக்குயிரான மதனியை
மறக்க முடியாத அன்பு நினைவுகளுடன்

மைத்துனி சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வத்தை வணங்கிய என் தெய்வமே!

நீர் பல்லாண்டு வாழ
ஆசை கொண்டோம்!
அதற்காகவே தினம் தினம்
பூஜை செய்தோம்!
வருங்காலம் எதிலும் நீர்
இல்லையே! என நினைக்கையில்
எதிர்காலம் எதற்கு
என்று தோன்றுதம்மா!
வேலன் மானியம்பதியில்
நீர் செய்த பிரார்த்தனைகள்
ஏனைய கோவில்களில்
நீர் செய்த் அர்ச்சனைகள்
அத்தனையும் போதுமம்மா!
உமது ஆத்மா சாந்தி பெறும்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- ''அன்புத் தம்பி''

அருணாச்சலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு அக்கா

தங்கையாய் இருந்த என்னை
குழந்தையாய் வளர்த்தீர்கள் நீங்கள்
என்னை குழந்தைபோல் வளர்த்த கடன் தீர்க்கத்தான்
நீங்கள் குழந்தையாய் மாறி சிலகாலம் வாழ்ந்தீர்களோ

உங்களை குழந்தையாய் கருவிலே சுமக்கவில்லை - நான்
உங்களை என் நெஞ்சிலே சுமந்துவிட்டேன்
ஐ இரண்டு திங்கள்.

கட்டி அணைத்த கைகள் எங்கே
சொந்தக் கட்டவிழ்த்துச் சென்றனவோ
சிரித்துப்பேசிய நாட்கள் எங்கே
மீண்டும் திரும்பி வந்திடுமோ

'வா வா' என்றீர்கள் நீங்கள்
நாங்கள் உங்களிடம் வந்ததும்
நீங்கள் மௌனமாய் போனதும் ஏனோ

உங்கள் புன்னகை பூத்தமுகம் பார்க்க
இனி நாங்கள் என்ன செய்வோம் அக்கா
நம்மை விட்டுப் பிரிந்ததும் ஏனோ
நாங்கள் தானோ பாவம் செய்தோம்

மனத்திற்குள் வெம்புகின்றோம் உங்கள் முகம் காணாமல்
அன்புச் சிறையிலே எங்களை அடைத்துவிட்டு
நீங்கள் மட்டும் எங்களைவிட்டு நீங்கியதேன்

உங்கள் நினைவுகளை மீட்டாத நேரமில்லை
சிந்தாத கண்ணீருமில்லை
நாங்கள் சிந்தும் ஒவ்வொரு துளி கண்ணீரும்
உங்களிற்கு நாங்கள் செலுத்தும் அஞ்சலியாய் நினைக்கின்றோம்.

- அன்புத் தங்கை

ராணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *To my beloved Thanah Appaachi*

There are a few feelings that cannot be expressed by words; my grief for you is one among them. There is no way that I can word my pain in a letter nor express it to the world. In each teardrop that I shed, I see your pleasant face that always expressed love for us, the smile of yours that spread the rays of a divine love. Thanah Appaachi, you came into my life even before I was old enough to realize the value of love. We were taught to call you Thanah Appaachi; Thanah, referred to your name Thanaluxshmi and Appaachi, because you were no less than a mother to our Appa. It was through you that Appa taught me what love meant; it was through you that Amma taught me what a motherly affection meant.

I remember how you took the bus all the way from Moratuwa to Wellawata, to bring Soya curry and other dishes for Amma when she was expecting Hari. My eyes are welling with salty tears while the taste of your curry still mingles in my throat. The stories that you told Appa and Maami became our bedtime stories when Hari and I were toddlers. I shall never forget the little something that you brought for every one of us at home whenever you visited us. Appa refers to you while he speaks about the generosity of King Karna in Mahabaratha. King Karna might be a legendary character, but you were a living role model for humanity and kindness. Our birthday parties were never fulfilled without your hugs, your blessing, your gifts, and of course the love that you always carried with you in your eyes and in your heart. Today I weep within my self when I think of the lap that you always called me affectionately to sit on. As a five year old I was always very eager to go to Sai Bajans with you not because I understood the spiritual importance of it, but because I knew that you would give your share of lattu to me as well. I was always known to be the naughty, loud and messy child when I was little. Whenever Amma or Appa scolded me for my stupidity I knew that there was still mercy in one place in this whole wide world, which was none other than you. I remember you defending me saying "Paavam Athu Chinna Kutti thane", whenever



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Amma or Appa scolded me. The charming beauty in your face even after age crept into your skin showed us the innocence and the liveliness in your soul.

Thanah Appaachi, you showed us how to be an obedient wife, loving sister, caring aunty and of course an adorable grandmother. It amazes me when I think of how much love you showed us through all what you did for us, even the simplest things like bringing us countless re-fills of drinks whenever we visited you, the tight bear hug you gave us whenever you saw us. The last time when I saw you in Sri Lanka your eyes became teary and your lips trembled with the fear of not seeing us again. I held your hands tight with the assurance of coming back to see you, today my conscience is tearing through my heart with the dagger of guilt. Here I am in Canada miles away from my homeland asking God why I was not given a chance to bid good-bye to my beloved Appaachi, who was fast asleep for a very long period of time hoping that I would come to say good bye to her with a kiss. The feel of guilt pricks me like a thorn when I think that I failed to do my last rituals to you, pay my tribute to you. Today when my relatives and my friends ask me how much I loved you and how much I miss you, I stand speechless. How can I explain to others about the feeling that runs through my blood? How can I measure the love that I had for you? With whom shall I share the pain of my grief? Who shall understand how much I miss you? I understand that it is indeed God's desire for you to rest in peace after all the hard work that you have done for others. I know that although you are not in person with us, your soul will be guiding us towards a sacred path. Thanah Appaachi, please for give me for not being there beside you, hope you will understand that even though I was unable to come, my soul was with you always. Thanah Appaachi, please give us the strength to bear the sorrow and the pain of your absence. We bid you good-bye and ask the Almighty to let you rest in peace.

- Remembering you
Your beloved Granddaughter

Vanchi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Remembrance of my appamma with tears*

I would like to take this chance to share some memories on my beloved, Appamma, called as Thana periamma. In July 2002 when I visited Sri Lanka I was extremely excited to visit all my grandparents for the first time. I still remember once she told me "if I go on a search of a goal I must never come back without succeeding". As her wish I will succeed in the goals that I place and remember the words she said. I know she is a very caring and kind person.

My dad always said that before he got a job and started to earn, her support was very helpful in order to achieve his goals.

I was very anxious to see her again in August 2005, when I visited Sri Lanka for the second time. I was disappointed that she could not speak to me and I could not speak to her. I didn't think in the past that I would see her in this way. I would always take such things as granted until I loose track of this real treasure I have in sight.

May appamma's soul rest inpeace.

- Loving granddaughter,

Shivajini subra



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MRS. T. LANKANATHAN, NEE. MISS. MANICKAM

Thursday evening, 09th March 2006, my phone alerted me that I had missed a call from an eminent teacher of mine, Mr.S.G.Samuel. His concern that day was to convey to me the sad news of the demise, the previous day, of an eqyally eminent teacher of mine, Mrs. T. Lankanathan - affectionately and respectfully remembered by us as "Manickam Teacher".

I said eminent - yes respected and eminent they were because they were the eyes through which we were to visualize our educational prospects and the future life to be.

Given the conviction that "from Him have we come and to Him is our return", I was overwhelmed with sadness the day we paid our last respects to our beloved teacher. The sadness, understandably, was due to the realization that the beginning of the passing away of a conflict free era of devoted educational service was in the offing with the death of a flag-bearer of a teacher of that era and of that vintage.

Gentle persuasion with firmness was one of her hallmarks. The knack and the sensitivity to correctly judge the needs of her students, often in consultation with her close colleagues, prompted her to pay special attention to promising students. I thank God for the efforts I could put in to make her special attention turn into a rewarding experience for her. The blessing of correct guidance for us through her and her close colleagues during our formative years made the Aluthgama days a golden period for us.

This note of appreciation from me, I trust, would be a source of comfort for her family members and Mr.Lankanathan, as we share their grief and prayers for her.

- Dr.A.L.M.Hafrath,
MBBS (Cey.), MRCP(UK)

Consultant Visiting Physician
Negombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Mrs. Thanaluxmi Lankanathan – the Golden Star*

Mrs. Thanaluxmi Lankanathan, commonly known among her close associates as Thanah, is no more with us. She was bottled sunshine, but the cruel hand of destiny has taken the lid off the bottle.

I came to know Thanah with my marriage to her elder sister as far back as half century ago. She was then a young girl with all the fun and frolic characteristic among girls of her age. I soon began to realize that she was a rational thinker and an intellect very much above normal standard. However, she never displayed her intelligence to any one, to score merit for herself. It was noticeable that she exhibited the spirit of sportsmanship whenever occasions arose. I was and am still proud that I have had a sister - in - law of her caliber.

With her death the thought overwhelmed me that all goodness and sanity were being smashed to smithereens and the feeling that goodness is becoming obscured by the forces of evil is strengthened.

She lived a lady in the true sense of the word, that in her presence, an ordinary man is a gentleman. She was a repository of human conscience and social justice

She possessed the greatness to ignore the faults if any of others and to appreciate the best of their performances. I imagine that her extraordinary, but exalted behavior in a world where aggrandizement, evil, envy and all other norms may have made this lady a misfit.

She was an extraordinary lady, taciturn, but with a deep sense of piety. No one in this world is perfect. If any one accuses her or points out her petty faults, she receives those accusations with a sweet smile.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Her death is a defeat for human dignity, truth and unselfish love she personified as a loving wife, a true friend to many and a selfless lover of all children although she had none of her own.

She never hesitated to offer her help in any form to those who needed, but expecting no reward in return. Her just reward was the inner satisfaction she derived from such deeds.

Many of her past students over about 40 years ago, now eminent personalities in public life volunteering to be Pall - bearers at her funeral is a clear demonstration of the extent to which she had captured the admiration and regards of them all.

Thanah the gentle lady faded away from our presence, but shall never from our hearts and memory.

The tear drops of all her loved ones she left behind, whenever her thoughts haunt them, will be the blessings to this gentle lady.

Farewell gentle Lady,
Candle of Sunshine!

- brother - in - law

T. Jeganathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நிறைந்த
## எங்கள் மாணிக்க(ம்) ரீச்சர்.

அளுத்கமை ஸாஹிறாக் கல்லூரியில் 1960-1970 களில் கல்வி கற்ற மாணவர்கள் மனதில் நீங்காது இடம் பெற்றிருந்த திருமதி தனலக்ஷ்மி இலங்கநாதன் அவர்களின் நினைவாக வெளியிடப்படும் இம்மலரில் அவரைப் பற்றி இன்றும் பசுமையாக இருக்கின்ற எனது நினைவுகள் சிலவற்றைப் பதிக்க விரும்புகிறேன்

திருமணத்திற்கு முன்பு அவர் செல்வி ரீ. மாணிக்கம் என்ற பெயரையே பயன்படுத்தியதால் ஸாஹிராக் கல்லூரியில் கடமை யாற்றிய காலம் பூராகவும் அவரை மாணிக்க ரீச்சர் என்றே அனைவரும் அன்போடு அழைத்தனர். கல்லூரி வளவை அடுத்திருந்த கனிஷ்ட மாணவர் விடுதியில்தான் அவர் தங்கியிருந்தார். விடுதிப் பொறுப்பாளராகவும் இருந்த அவர் எப்படித்தான் அந்தச் சிறிய அறையில் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் பல வருடங்களைக் கடத்தினாரோ என நான் இன்றும் ஆச்சரியப்படுவதுண்டு.

தினமும் அதிகாலையில் மிக நேர்த்தியாக உடையணிந்து அவர் பாடசாலைக்குச் செல்லும் காட்சி இன்றும் பசுமையாக நினைவில் இருக்கிறது. அவரைப் போன்று நேர்த்தியாகவும் கண்ணியமான முறையிலும் உடையணிந்து வந்தவர்கள் அப்போது பேறெவரும் இருக்கவில்லை.

சாதாரண தர வகுப்பில் அவரிடம் உயிரியல் பாடம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. எமது ஜூனியர்களான எமது தம்பியின் வகுப்பினருக்கு அவர் தான் வகுப்பாசிரியராக இருந்து உயிரியல் பாடமும் கற்பித்தார். நாம் ஜீ.சீ.ஈ பரீட்சை எழுதிய பின்னர் பெறுபேறுகள் வரும் வரை அந்த வகுப்பில் சேர்ந்து கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது தான் முதற் தடவையாக மிஸ் மாணிக்கம் அவர்களிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தாயின் சுகவீனம் காரணமாக ஒரு நாள் நான் பாடசாலை செல்லத் தவறிவிட்டேன். அதற்காக மன்னிப்புக் கோரித் தாயாரிடமிருந்து கடிதம் கொண்டு செல்லவும் முடியாமற் போய்விட்டது. ரீச்சர் என்னைத் தனியாக அழைத்து விசாரித்தார். நான் உண்மையான காரணத்தைச் சொன்னேன். 'சரி' என்று கூறி என்னைப் போய் உட்காரச் சொன்னார். பின்னர் என் தம்பியைத் தனியாக அழைத்து 'அண்ணன் பாடசாலைக்கு வராத காரணத்தை எழுதித் தாரும்' என்றார் அவர். தம்பியும் நான் சொன்னதையே எழுதிக் கொடுத்திருக்கிறார். அதன் பின்னர்தான் ரீச்சர் திருப்தியடைந்தார். தனது மாணவர்களைப் பாடசாலை விதிகளுக்கு ஏற்ப ஒழுக வைப்பதில் அவர் காட்டிய கரிசனை கொஞ்சநஞ்சமல்ல.

திருமதி. இலங்கநாதன் அவர்கள் உயர்தர வகுப்பில் எனக்குத் தாவரவியல் கற்பித்தார். அந்த வருடத்தில் நாம் மூவர்தான் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் இருந்தோம். ஒரு நாள் தாவரவியல் பாடம் நடந்து கொண்டிருந்தபோது எனது சக மாணவர்கள் இருவரும் பாடத்தைக் கவனிக்காமல் ஏதோ சேட்டை செய்து சிரித்துக் கொண்டிருந்தனர். ரீச்சரின் முகத்தில் எரிச்சல் தோன்றுவதைக் கண்ட நான் அவர்களது குறும்பில் கலந்துகொள்ளாமல் பாடத்தைக் கவனிக்க முயற்சித்தேன். எனினும் எனது மனம் நண்பர்களது சிரிப்பில் கலந்துகொள்ளவே முயற்சித்தது. திடீரெனக் கற்பிப்பதை நிறுத்திய ஆசிரியை என்னைச் சுட்டிக் காட்டியவாறு "இவனைப் போல் பாடத்தைக் கவனிக்கிற மாதிரி பாசாங்கு செய்யவாவது உங்களால் முடியாதா?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். மாணவர்களின் உளப்போக்குகளை அவர் எவ்வளவு ஆழமாகப் புரிந்து வைத்திருந்தார் என்பதை நினைக்கும் போது இன்றும் வியப்புத்தான் ஏற்படுகிறது. இப்போதும் நான் வகுப்பறைகளில் கற்பிக்கும் போது ஆசிரியரின் இக் கூற்று திடீரென நினைவுக்கு வருகிறது.

எங்கள் ஆசிரியையிடம் பல்வேறு சிறப்பியல்புகள் காணப்பட்டன. எப்போதும் அமைதியாகவே தோற்றமளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் எத்தனையோ திறமைகள் பொதிந்திருந்தன. ஒரு நாள் மாலை வேளையில் ஆசிரியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கர்நாடக சங்கீதக் கச்சேரியில் திருமதி இலங்கநாதன் அவர்களும் பாடினார்கள். அவரது இசை ஞானத்தைக் கண்டு எல்லோரும் வியந்தது இன்றும் எனக்கு நினைவில் இருக்கிறது.

எமது பாடசாலை வாழ்க்கையில் ஒரேயொரு தடவைதான் எமது ஆசிரியை மேடையில் பேசுவதைக் கேட்டோம். ஒரு நாள் காலைக் கூட்டத்தின் போது 'கல்விச் செல்வம்' என்ற தலைப்பில் வள்ளுவரின் வாக்குகளை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். அசல் யாழ்ப்பாண உச்சரிப்புடன் ஒரு சொற்பொழிவொன்றைக் கேட்கும் வாய்ப்பு அன்றுதான் எனக்குக் கிடைத்தது.

இன்று எமது மதிப்புக்குரிய ஆசிரியை எம்மோடு இல்லை. எனினும் வடக்கிலே பிறந்து வளர்ந்த அவர் தெற்கிலே ஒரு முஸ்லிம் ஊரில் பல வருடகாலம் கண்ணியமான முறையில் இணக்கத்தோடு வாழ்ந்து கல்விப்பணி புரிந்த அந்தக்கால நினைவுகள் ஸாஹிறாக் கல்லூரி இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

- நன்றி மறவா

Hafiz; Hameez



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றென்றும் மறுவா நன்றி நவிலல்
# ACKNOWLEDGMENT

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம்

**திருமதி தனலக்ஷ்மி இலங்கநாதன்**

அவர்கள் சிவபதம் எய்தியவேளை செய்தியறிந்து எங்கள் இல்லங்களுக்கு நேரில் வந்து துயர் பகிர்ந்தோர்க்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்திற் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

ஜெயரட்ன பார்வையாளர் மண்டபத்திற்கு வருகைதந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்தவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்துத் தந்தவர்களுக்கும்,

இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி, சபிண்டீகரணம் முதலியவற்றில் எம்முடன் இணைந்து உறுதுணையாய் நின்று உதவியோர்க்கும் கலந்து சிறப்பித்வர்களுக்கும், பரமன் புகழ்பாடும் திருமுறைகளை ஓதியவர்களுக்கும் அனைத்துக் கிரியைகளையும் நடாத்தி வைத்த அந்தணப் பெரியோர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான மருத்துவ உதவிகள் புரிந்த Dr. S. Sasikaran, தேவையறிந்து செயலாற்றிய Prof. Dr. Sir Selvakumar, Dr.Svetlana G. Sarantchouk, Physiotherapist Mr. Cyril Chandrasiri, Nurses Miss. Vasanthi, Miss. Nilanthi, Ceylinco Home Nursing Services ஆகியயோர்க்கும்,

இந்த நினைவுமலரை அழகுற அச்சமைத்துத் தந்த Global Graphics அச்சகத்தாருக்கும்,

மற்றும் தேவையான போதெல்லாம் உதவி, ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


> ''காலத்தினால் செய்த நன்றி சிறுது எனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது''

இங்கனம்
- கணவர், உற்றார், உறவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

## ஞாபகார்த்தப் புலம்பல்கள்

**அன்புக்கணவன்**

என்தனைக் கணவனாய் ஏற்றியே போற்றிட்ட
இயல்பினை நினைந்தழுவனோ
எண்ணரிய பணிவிடைகள் செய்துமே வாழ்ந்திட்ட
இனிமையை நினைந்தழுவனோ
உண்ணுதற் கேற்றநல் உணவுகளை ஆக்கியே
உதவுசெயல் நினைந்தழுவனோ
மண்ணினார் புகழ்ந்திட செயல் கன்பல செய்திட்ட
வகையினை நினைந்தழுவனோ
வண்ணமயில் போலவே என்முன்னர் நின்று நீ
வருவதை நினைந்தழுவனோ
பெண்ணின மெலாமுனை பின்பற்றி நின்றிட்ட
பெற்றியை நினைந்தழுவனோ
தண்ணிய சொற்களை வீசியே என்தனைத்
தனைந்ததை நினைந்தழுவனோ
என்னரிய தங்கமே எதைநினைந் திட்டு நான்
ஏங்குவது சொல்லுவாயே.

**அன்புச் சகோதரிகள்**

துன்பங்கள் எவைவரினும் துடைத்தொ ழித்துக்
காப்பாற்றும் துணையே! தூய்மை யான
அன்புள்ளம் கொண்ட வெந்தன் அருமை யான
சகோதரியே நாமிகவே அழுத ரற்ற
வன்புள்ளம் கொண்டகாலன் வந்தே உன்தன்
உயிர்கொண்டு மறைந்துவிட்டான் ஐயோ எங்கள்
என்புருக நின்பிரிவை எண்ணி எண்ணி
ஏங்குகிறோம் என்செய்வோம் என்செய் வோமே!

**அன்பு மைத்துனர்கள்**

தந்தை தாயர்கள் முன்புசெய்தவத் தாலேவந்த தயாநிதி
உந்தன் மைத்துனர் எங்களுக்கு நல் உதவியாய குணாநிதி
விந்தை நீயெமை விட்டு நீங்குதல் வேறுயாதுண மைத்துனி
அந்த கன்பெரும் தீங்கிழைத்தனன் ஆறுமோ துயர் மாறுமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புப் பெறாமக்கள்**

பங்கய வதனம் காணோம்
பவளச்செவ் வாயை காணோம்
அங்கையைக் காட்டி எம்மை
அழைக்கின்ற அழைப்பைக் காணோம்
திங்கணம் பிறையைப் போன்ற
திருநுதல் தன்னைக் காணோம்
இங்கிவை தமைநி னைந்தே
ஏங்கினோம் சின்னம் மாவே

**அன்புப் பேரப்பிள்ளைகள்**

பார்தந்தாய் பயின்றதவப் பயனைத் தந்தாய்
பரிவொடுபால் பழமாதி பலவும் தந்தாய்
தாள்தந்தாய் மணிதந்தாய் தளல்தோள் தந்தாய்
தாங்கமிரு கைதந்தாய் தனமும் தந்தாய்
பேர்தந்தாய் புகழ்தந்தாய் செம்பொன் தந்தாய்
பிறர்எவர்க்கும் இல்லாத பெருமை தந்தாய்
சீர்தந்தாய் சிறந்த பட்டுச் சட்டை தந்தாய்
செல்வர் நலம் என்தருவோம் செப்பு வாயே!

**அன்பு உற்றார் உறவினர்**

வந்து பிறந்திட்ட சேர்ந்த ஊர்கள் தோறும்
வல்லவனே நிர்செய்த தறிவோம் கேட்டாப்
எந்தவிதத் தடையுமின்றி சுணங்கி டாமல்
எல்லாமே செய்திட்டாய் இறுமாப் பின்றி
சொந்தபந்தம் என்றில்லை எவருக் கேனும்
தூயகடன் செய்திடநீர் மறந்த தில்லை
சிந்தைதளர்ந் தழவிட்டுச் சென்று விட்டீர்
சிவனடியே சேர்ந்தமைதி பெறுக சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Gist of Gita

Whatever happened to you,
It went on well.
Whatever is happening now
Is going well.
Whatever has to happen
Will also be good.
What have you lost
For you to cry?
What have you brought with you?
For you to lose
What have you created
For it to go waste
Whatever you obtained
Was taken from here.
Anything you gave away
Was given to you here
What is yours today,
Will belong to someone tomorrow.
In another day,
It may belong to someone else.

"This is the rule of nature
and my summary of creation"
- Lord Sri Krishna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே
நடந்தது.

எது நடக்கிறதோ, அது நன்றாகவே
நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும்
நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ
இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய், அது
வீணாகுவதற்கு.

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது
இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே
கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ, அது
நாளை மற்றொருவருடையதாகிறது.

மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

இந்தமாற்றம்
உலக நியதியாகும்.



பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Global Graphics - # 14, 57th Lane, Wellawatta, Colombo 06, Sri Lanka. Tel : 0094 11 4 510631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org